# பெரிய முள்ளங்கி

1.
ஒரு தாத்தாவின் தோட்டத்திலே ஒரு
மிகப்பெரிய முள்ளங்கி வளர்ந்து இருந்தது.

2.
தாத்தா இழுக்க இழுக்க முள்ளங்கி
வெளியே வரவில்லை.
தாத்தா பாட்டியைக் கூப்பிட்டார்.

3.
தாத்தாவும் பாட்டியும் சேர்ந்து இழுக்க
இழுக்க முள்ளங்கி வெளியே வரவில்லை.
பாட்டி பேத்தியைக் கூப்பிட்டார்.

4.
தாத்தா, பாட்டி, பேத்தி ஆகியோர் இழுக்க
இழுக்க முள்ளங்கி வெளியே வரவில்லை.
தாத்தா நாயைக் கூப்பிட்டார்.

5.
தாத்தா, பாட்டி, பேத்தி, நாய் சேர்ந்து இழுக்க
இழுக்க முள்ளங்கி வெளியே வரவில்லை.
நாய் பூனையைக் கூப்பிட்டது.

6.
தாத்தா, பாட்டி, பேத்தி, நாய், பூனை ஆகியோர்
இழுக்க இழுக்க முள்ளங்கி வெளியே வரவில்லை.
பூனை எலியைக் கூப்பிட்டது.
தாத்தா, பாட்டி, பேத்தி, நாய், பூனை, எலி
ஆகியோர் இழுக்க இழுக்க ... ... ...

7.
கடைசியில், எலியின் உதவியினால் அவர்கள்
மிகப் பெரிய முள்ளங்கியை தோட்டத்திலிருந்து
வெளியே எடுத்தனர்.